II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No. 196 of 2022**

Deposition of witness for the Plaintiff /PW 1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 12.11.2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பரிமளா | Age | : | |
| Father's / Husband's Name | : | | Village | : | |
| Taluk | : | | Distict | : | |

<u>பிரதிவாதி தரப்பில் பிரதிவாதியே ஆஜராகி குறுக்கு விசாரணை தொடர்ச்சியாக செய்யப்படுகிறது–</u>

சரோஜம்மாள் எழுதிக்கொடுத்த விடுதலை பத்திரம் எனக்கு 2020 ம் ஆண்டு ஜெனவரி மாதமே தெரியும் என்றும் ஆனால் 8 மாதம் கழித்து தான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என் மகளின் பிரசவத்திற்காக டிசம்பர் மாதமே அமெரிக்கா போய்விட்டேன். கோரோனா காலம் என்பதால் 6 மாதம் கழித்து திரும்பி வந்த பிறகு விவரம் தெரிந்து புகார் கொடுத்தேன். 2021 ம் ஆண்டே W.P.No.9023/2021 யை மாண்புமிகு சென்னை உயர் நிதிமன்றத்தில் நான் தாக்கல் செய்திருந்தததை இந்த வழக்கில் நான் தெரிவிக்கவில்லை என்றால் அந்த வழக்கை நான் நடத்தவில்லை. W.P.No.9023/2021 ல் சமாதானமாக போவதற்காக ஒப்புக்கொண்டுவிட்டு பிறகு நான் தான் மக்கள் நீதிமன்றத்திற்கு வரவில்லை என்றால் அந்த விசயமே எனக்கு தெரியாது. நான் போலிஸில் கொடுத்த புகாருக்கு என் தாயாரிடம் போலிசார் வாக்குமூலம் வாங்கினார்கள். என்னிடமும் வாக்குமூலம் வாங்கினார்கள். 2025 ல் நான் போலிசாரிடம் கேட்ட பிறகு தான் ரேகாவின் பெயரிலும் வழக்கு போடப்பட்டது என்றால் சரியல்ல.

முதலிலேயே இருந்தது. என் அப்பாவின் பெயரில் இருந்த ஆவணங்கள் காணாமல் போய்விட்ட நிலையில் அதன் நகல் ஆவணங்களை பெற்று அந்த இடத்தை விற்றுவிட்டோம். பிரதிவாதிக்கு இடம் கொடுப்பதற்கு நான் ஒத்துக்கொள்ளவில்லை. எனது சகோதரியும் எனது அம்மாவும் ஒத்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. சரோஜம்மாள் விடுதலை பத்திரத்தை மனப்பூர்வமாக தான் எழுதிக்கொடுத்தார் என்றும் எனவே நான்கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை– இல்லை.